BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

## ப்ராம்ப்ட்டன் நகரமே! தயாராகி வா!! ஜூடித் நைமன் கனவுகளின் களம் (Judith Nyman Field Of Dreams) இப்போது கட்டி முடிக்கப்பட்டுவிட்டது

ப்ராம்ப்ட்டன், ON (டிசம்பர் 15, 2021) – புதிய ஜூடித் நைமன் கனவுகளின் களம் (Judith Nyman Field Of Dreams) கட்டி முடிக்கப்பட்டு விட்டது என்பதில் ப்ராம்ப்ட்டன் நகரம், பீல் மாவட்ட பள்ளி வாரியம் (PDSB) மற்றும் ஜேய்ஸ் கேர் ஃபவுண்டேஷன் அமைப்பு ஆகியவை பரவசமடைந்துள்ளனர்; பேஸ்பால் டயமண்ட் வடிவ விளையாட்டுக் களம் இப்போது அடுத்த வசந்த பருவத்திற்கான முன்பதிவுகளை ஏற்றுக்கொள்ள தயாராகி விட்டது.

2020 ஆம் ஆண்டில், கனடாவில் ஜேய்ஸ் கேர் ஃபவுண்டேஷன் கனவுகளின் களம் (Jays Care Foundation Field Of Dreams) வழங்கும் மானியத்தைப் பெற்ற 12 அமைப்புக்களில் ப்ராம்ப்ட்டன் நகரமும் ஒன்று. இந்த மானியம் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பேஸ்பால் விளையாடுவதற்கும், ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பதற்கும், வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துவதற்குமான அணுகக்கூடிய இடங்களை வடிவமைப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் மற்றும் மேம்படுத்தவும் நிதியுதவி வழங்குகிறது. இந்த திட்டப்பணிக்கான நிதியில் மூன்றில் ஒரு பங்கை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் வழங்கியது; மற்றொரு மூன்றில் ஒரு பங்கினை PDSB நிதியுதவி மூலமாகவும் மீதமுள்ள மூன்றில் ஒரு பகுதியை ஜேய்ஸ் கேர் அறக்கட்டளையும் மானியமாக வழங்குகின்றன.

**இதன் வகையில்** ப்ராம்ப்ட்டனில் முதன்முதலான இந்த ஜூடித் நைமன் கனவுகளின் களமானது, ஜூடித் நைமன் மேல்நிலைப் பள்ளி மற்றும் வில்லியம்ஸ் பார்க்வே சீனியர் பப்ளிக் பள்ளிக்கு இடையே உள்ள பசுமையான இடத்துக்கு ஒரு கூடுதல் சிறப்பு சேர்க்கும் இடமாகும். எண் 1305, வில்லியம்ஸ் பார்க்வே யில் அமைந்துள்ள இந்த பேஸ்பால் டயமண்ட் வடிவ மைதானம் சிங்க்வாகவ்ஸி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு தோதாக உள்ளது மற்றும் நெடுஞ்சாலை எண் 410 ஐ எளிதாக அணுகலாம்; இதனால் அனைத்து ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கும் இந்த தளம் வசதியாக உள்ளது. இந்த திட்டப்பணியானது, பீல் மாவட்ட பள்ளி வாரியம் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரத்திற்கு இடையே உள்ள பொது கூட்டு முயற்சியின் மற்றொரு சிறந்த உதாரணம் ஆகும்; இது மாணவர்கள் மற்றும் குடியிருப்புவாசிகள், பொழுதுபோக்கு வசதிகளை எளிதில் அடைய வழி வகுக்கிறது; சேல்லஞ்சர் பேஸ்பால் மற்றும் சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டுக்கள் போன்ற வாரியங்கள், மற்றும் சமுதாய நிறுவனங்களால் நன்கு உபயோகப்படுத்திக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

புதிய ஜூடித் நைமன் கனவுகளின் களமானது, கணிசமான அணுகக்கூடியதன்மை மற்றும் இப்படியான செயல்பாட்டு அம்சங்களைக்  கொண்டுள்ளது: ஒரு செயற்கை புல்வெளி மைதானம்; மாற்றியமைக்கப்பட்ட பேஸ் பாதைகள் (60'); ஒரு குறுகிய வெளிக்களம்; எந்த தர மாற்றமும் இல்லாமல் மாற்றியமைக்கப்பட்ட, பந்து வீசுபவருக்கான  முகடு; அடுத்து விளையாட இருக்கும் வீரர்களுக்கான அமரும் பெஞ்ச் பகுதி; மற்றும், களத்திற்கு செல்லும் வகையிலான கான்கிரீட் அணுகல் பாதைகள். வெளிவட்ட களம்  இயற்கையான புல்லால் ஆனது மற்றும் எச்சரிக்கை பாதை கடினமான சரளைக் கற்களால் ஆனது.

ஜூடித் நைமன் கனவுகளின் களத்தைப் பயன்படுத்துபவர்களுக்காக ட்டெர்ரி மில்லர் பொழுதுபோக்கு மைய வாகன நிறுத்துமிடத்தில், அதை அணுகும் வகையிலான சாய்தளம் மற்றும் வாகன நிறுத்த இடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பேஸ்பால் டயமண்ட் வடிவ களத்தின் மற்ற அம்சங்கள் பின்வருமாறு: ஹோம் பிளேட்-க்கு பின்னால் ரசிகர்களுக்கான ப்ளீச்சர் இருக்கை; விளையாடிக்கொண்டிருக்கும் வெவ்வேறு அணிகளுக்கு நான்கு முகடுகள்; மற்றும், ஹோம் பிளேட்டில் இருந்து 225 அடி தூரத்தில் ஒரு வெளிமைதான வேலி.

திறப்பு விழாவுக்கான சிறப்பு நிகழ்ச்சி ஏப்ரல் 2022 இல் நடத்தப்படும்.

ஜூடித் நைமன் கனவுகளுக்கான களத்தின் டயமண்ட் வடிவ சதுக்கத்திற்காக முன்பதிவு செய்ய, குடியிருப்பாளர்கள், விளையாட்டுக் குழுக்கள் மற்றும் தடைகள் இல்லாத வகையில் வசதிகள் தேவைப்படும் சமூக நிறுவனங்கள், நகரின் விளையாட்டு மைதானங்களை  வாடகைக்கு விடும் பிரிவை 905-874-BOOK (2665) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது facilityrentals@brampton.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்; இதனை எதிர்வரும் வசந்த பருவத்தில் செய்யலாம்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரமாகும்; இதில் இளைஞர்கள் சுறுசுறுப்பாக இருக்க பல சந்தர்ப்பங்கள் உள்ளன. புதிய ஜூடித் நைமன் கனவுகளின் களமானது ஒரு சிறந்த கூடுதல் வசதியமைப்பாகும்; வரவிருக்கும் ஆண்டுகளில், இது இளைஞர்கள் மற்றும் ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள்  அனைவரின் உடல் செயல்பாடுகளைத் தொடர்ந்து ஊக்குவிக்கும். வரவிருக்கும் வசந்த காலத்தில் இந்தப் புதிய களத்தில் விளையாடத் தேவையான நேரத்தை முன்பதிவு செய்துகொள்ள அனைவரையும் ஊக்குவிக்கிறேன்.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

”ஜூடித் நைமன் கனவுகளின் களமானது, எங்கள் சமூகத்திற்கு கூடுதல் சிறப்பு அம்சமாகும். பீல் மாவட்ட பள்ளி வாரியம் மற்றும் ஜேய்ஸ் கேர் ஃபவுண்டேஷனுடன் இணைந்து, எளிதில் அணுகக்கூடிய பேஸ்பால் டயமண்ட் வடிவ சதுக்கத்தை ப்ராம்ப்ட்டனுக்கு கொண்டு வருவதில் பெருமிதம் கொள்கிறோம். எங்கள் குடியிருப்பாளர்களின் வீட்டிற்கு அருகிலேயே ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பதற்கான வாய்ப்பளிக்கின்ற இந்தப் புதிய களத்தை அவர்கள் அனுபவிப்பார்கள் என்பதை நான் அறிவேன்.

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“அனைத்து குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலான முதலீட்டை ப்ராம்ப்ட்டனுக்கு கொண்டு வருவதற்கு நகர அலுவலர்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளனர். புதிய ஜூடித் நைமன் கனவுகளின் களமனது நமது சமூகத்தில் நேரடி முதலீடாகும், மேலும் ப்ராம்ப்ட்டனுக்கு உடல்நலம் மற்றும் ஆரோக்கிய வாய்ப்புகளை கொண்டு வருவதற்காக, வளர்ச்சியில் எங்களுடன் பங்கெடுப்பவர்களுடன் தொடர்ந்து பணியாற்றுவோம்.

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"பீல் பகுதி மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் எளிதில்  அணுகக்கூடிய பேஸ் பால் டயமண்ட் வடிவ விளையாட்டுக் களத்தை கொண்டு வந்ததில் ப்ராம்ப்ட்டன் நகரம் மற்றும் ஜேய்ஸ் கேர் அறக்கட்டளையுடன் கூட்டு சேர்வதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இது போன்ற திட்டப்பணிகள், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, மேலும் ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கும் ஒரு சிறந்த வசதியமைப்புக்கான அணுகலைக் கொண்டுவருவதற்கான அனைத்து மகத்தான முயற்சிகளுக்கும் நாங்கள் நன்றிக்கடன்பட்டவர்களாக இருக்கிறோம்."

- *ராஷ்மி ஸ்வரூப், கல்வி இயக்குனர், PDSB*

”புதிய ஜூடித் நைமன் கனவுகளின் களத்தில் பேஸ்பால் விளையாட்டின் மூலம் அனைத்து திறன் வகை குழந்தைகள் மற்றும் இளைஞர்களும் முக்கியமான வாழ்க்கைத் திறன்களைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை விரைவில் பெறுவார்கள் என்பதில் ஜேய்ஸ் கேர் அறக்கட்டளை மிகவும் பரவசமாக உள்ளது. இந்தத் திட்டத்தை உயிர்ப்பித்ததற்காக ஜூடித் நைமன் மேல்நிலைப் பள்ளி, மேயர் ப்ரவுன், ப்ராம்ப்ட்டன் நகரம் மற்றும் பீல் மாவட்ட பள்ளி வாரியம் ஆகியவை அடங்கிய அபாரமான குழுவை நான் அங்கீகரிக்க விரும்புகிறேன். இந்த டயமண்ட் வடிவ சதுக்கத்தைப் பயன்படுத்தும் மாணவர்களின் சிறந்த முயற்சிகளைக் கொண்டாடவும், வரும் ஆண்டுகளில் இந்தத் திட்டம் ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்தைக் காணவும் நாங்கள் காத்திருக்கிறோம்.”

- *ராபர்ட் விட்ச்செல், செயல்பாட்டு இயக்குனர், ஜேய்ஸ் கேர் ஃபவுண்டேஷன்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca